| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 292/2014 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | கோபால் | நாள் | 09.08.2021 |
| தகப்பனார் பெயர் | காளியப்பன் | | |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

காடு குறைவாக உள்ளது என நீதிமன்ற ஆணையாளரை நியமிக்கவும், என்னை தொல்லை செய்வதாலும் வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துவிபரத்திலும் காடு குறைவாக உள்ளது எனக்கூறி தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆமாம். எவ்வளவு சென்ட் குறைவாக உள்ளது என வழக்கில் கூறியுள்ளேன் என்றால் அளந்து பார்த்தபோது தான் 14 3/4 சென்ட் குறைவாக உள்ளது என தெரிய வந்தது. நீதிமன்ற ஆணையாளர் அளந்து பார்த்த போது தான் தெரிய வந்ததா என்றால் ஆமாம். என்ன சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்.848. குப்புசாமி கவுண்டர் தோட்டத்திற்கு மேற்கு, கோம்பைக்கு செல்லும் பாதைக்கு தெற்கு மற்றும் கிழக்கு, சண்முகம் காட்டிற்கு வடக்கு என்ற நான்கெல்லைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். குப்புசாமி கவுண்டர் தோட்டத்திற்கு மேற்கு என்ற இடத்திற்கு என்ன சர்வே எண் என்றால் எனக்கு தெரியாது. கோம்பைக்கு செல்லும் பாதை எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் தெரியாது. சண்முகம் நிலம் எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் ஆமாம். ரத்தினசாமி, அருள்சாமி என்பவர் அம்புரோஸின் மகன்கள் என்றால் ஆமாம். 1980–ல் வில்லங்கம் போட்டுப் பார்த்து வாங்கினேன் என்றால் என்னுடைய தகப்பனார் தான் வாங்கினார். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் ஆறுமுகம் என்றால் தற்போது தாங்கள் கூறி தான் எனக்கு தெரியும். வழக்கு தாக்கல் செய்ததற்கு சங்கதிகளை வழக்கறிஞருக்கு நான் தான் கூறினேனா என்றால் ஆமாம். வழக்கில் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் பெயர் என்ன கூறப்பட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது என்றால் ஆறுமுகம் என குறிப்பிடப்பட்டுள்ளது. சத்தியப்பிரமாண வாக்குமூலம் பக்கம் 3–ல் அருள்சாமியின் மகன் தான் ரொசாரியா என்றால் ஆமாம். சத்தியப்பிரமாண வாக்குமூலம் பக்கம் 3ல் ரொசாரியாவிடமிருந்து 9 சென்ட் பிரதிவாதிகள் விலைக்கு வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த கிரையப்பத்திரத்தை

பார்த்திருக்கிறேனா என்றால் தற்போது வரை பார்க்கவில்லை. நீதிமன்றத்தில் அந்த 9 சென்ட் குறித்து பிரதிவாதிகள் வாங்கிய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளதை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதில் வழக்குரையை படித்துப்பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. சர்வே எண்.848/1 ஏ–வில் ரொசாரியாவிடமிருந்து வாங்கியதாக பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் கூறியுள்ளார்களா என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ல் அ.வ.எண்.149/1968–ன் படி பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளது என்றால் ஆமாம். வா.சா.ஆ.1–ல் என்ன பழைய சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சத்தியப்பிரமாண வாக்குமூலம் பக்கம் 3–ல் வடமேற்கு திசையில் சுமார் 6 சென்ட் நிலம் ஆக்கிரமித்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதி தன்னுடைய தகப்பனார் காலத்திலிருந்து குடிசை வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். சுமார் 20 வருடங்களுக்கு மேலாக குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சார் பதிவாளர் அலுவலகத்தில் வில்லங்க சான்று போட்டு பார்த்தேனா என்றால் போட்டு பார்த்தேன். அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. என்ன சர்வே எண்ணிற்கு வில்லங்கம் போட்டுபார்த்தேனா என்றால் சர்வே எண்.848–க்கு போட்டுப்பார்த்தேன். எந்த குறிப்புகள் அதில் உள்ளது என்றால் அதில் சதுரடி என வருகிறது. வா.சா.ஆ.1–ன் படிக்கு என்னுடைய தகப்பனார் வாங்கும்போதே சர்வே எண்.848 என்பது 1 முதல் 7 வரை உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது என்றால் இல்லை. வா.சா.ஆ.1–ல் குறிப்பிடப்பட்டுள்ள அ.வ.எண்.149/1968 வழக்கிலேயே சர்வே எண்.848 1 முதல் 7 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் வாங்கும்போதே தவறான சர்வே எண் குறிப்பிடப்பட்டு வாங்கினார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. என்னுடைய தகப்பனார் 1985 ல் இறந்துவிட்டார். அவர் இறக்கும்போது 70 வயது இருக்கும். வா.சா.ஆ.1 கிரையம் வாங்கியதற்கு பின்னிட்டு 5 ஆண்டுகள் கழித்து இறந்துவிட்டார் என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 ல் உள்ள பட்டா எண்.97. வா.சா.ஆ.2 வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு தான் வாங்கியது 10.12.2004 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். ஆனால் பட்டா 2005 ல் வழங்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2–ல் என்ன சர்வே எண்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.848/1ஏ என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2–ல் பத்து நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2012ல் கிரயம் பெறுவதற்கு பின்னிட்டு அவர்களது பெயர் ஏற்பட்டுள்ளது. என்னுடைய பெயரும், என்னுடைய சகோதரர் 1ம் வாதியின் பெயரும் வா.சா.ஆ.2–ல் சர்வே எண்.848/1ஏ–க்கு தான் ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம். வழக்குரையில் சர்வே எண்.848/1ஏ என்பது புதிய சர்வே எண் என கூறவில்லை என்றால் ஆமாம். சர்வே எண்.848/1ஏ–ல் மேற்படி 8 நபர்களுக்கு உரிமையுள்ளது என்றால் என்னுடைய நிலம் போக மீதி சொத்துக்கள் இருக்கலாம். அதை நான் எவ்வாறு கூற முடியும். கூட்டுப்பட்டா உள்ளதை என்னுடைய சொத்து எந்த சொத்து என தெரிந்து கொள்வதற்கு அளவையர் மூலம் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். அதுபோல் எப்போது நடவடிக்கை எடுத்தேன் என்றால் 2009–லிருந்து 2014 வரை 4 முறை அளந்துள்ளேன். ஒத்துவரவில்லை என்பதால் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4 முறை அளக்க முயற்சி செய்தது குறித்தும், அதனை தடுத்தது குறித்தும் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

பிரதிவாதிகள் வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.

ஒம்/–எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.